(6). அறிவிப்பு.

மதிப்பீட்டுக்குழு, பொதுக்கணக்குக்குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி), பொதுக் கணக்குக் குழு, (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிககவேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி புதன் கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(7). வரவுசெலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 31 — பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31 —பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,10,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. க. பாலன்: துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வட்டி இல்லா கடனை ரூ. 2,000 உள்பட்ட தொகையினை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை பற்றி நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: